Sakthi Arulanandham (Translated by Thila Varghese)

# A Tree Is Not (Just) a Tree

To see a tree merely as a tree
is like seeing a woman merely as a body.

Ask a passerby;
he will call it shade.
Ask a boy swinging from its aerial roots;
he will call it joy.
For the birds,
it is home.

Unraveling the mysteries of gravity,
and turning Siddhartha into the Buddha,
trees teach both science and spiritual wisdom.

To see the tree that nourishes
and generates the breath of life
as merely a tree…

மரம் என்பது மரம் (மட்டும்) அல்ல
சக்தி அருளானந்தம்

மரத்தை மரமாய் மட்டும் பார்ப்பதென்பது/
பெண்ணை உடலாய் மட்டும் பார்ப்பது போல.

ஒரு வழிப்போக்கனைக் கேள்
மரம் நிழல் என்பான்/
விழுதினைப் பிடித்து ஆடிடும் சிறுவன்
மகிழ்ச்சி என்பான்/
பறவைகளுக்கோ வீடு.

புவியீர்ப்பு விசைப் புதிரை விடுவித்தும்/
சித்தார்த்தனை புத்தனாக்கியும்/
விஞ்ஞானம் மெய்ஞானம் இரண்டையும் போதிக்கும் மரங்கள்.

உணவளித்து உயிர் வளி விளைக்கும்
மரத்தை மரமாய் மட்டும் பார்ப்பதென்பது...